TAMILTH Tiruchirapalli 1 Regional_02 S.THANGADURAI 224835 13793548

கிபி 10 முதல் 13-ம் நூற்றாண்டு வரை பிற்கால சோழர்கள் ஆட்சியில் இருந்தனர். அப்போது சோழப் பேரரசின் 2-வது தலைநகரமாக காஞ்சி இருந்தது. சோழர்களுக்கு பிறகு பாண்டியர்கள் வசம் இருந்த காஞ்சி, 14-ம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்கள் கைகளில் சென்றது.

திருக்கழுகுன்றத்தை அடுத்த பொன்விளைந்த களத்தூரில் 1,300 ஆண்டுகள் பழமையான முன்குடுமீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. சிவலிங்கத்தின் மீது குடுமி (முடிச்சு) இருப்பது மூலவரின் சிறப்பு. கோயிலின் கட்டமைப்பு சோழர் கால கட்டிடக் கலைக்கு சான்றாக விளங்குகிறது.

சின்னச் சின்னதாய்

ஸ்ரீரங்கம் பஞ்சக்கரை சாலை அருகே உள்ள அன்னை அவென்யூ பகுதியில், குடியிருப்புக்கு அருகே உள்ள கழிவுநீர் வாய்க்காலில் தேங்கியுள்ள கழிவுநீர். இதனால், இப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த கழிவுநீர் வாய்க்காலை சுத்தம் செய்ய மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

படம்: ர. செல்வமுத்துகுமார்

புதுக்கோட்டை மாவட்டத்தில் 8 பேரூராட்சிகளில்

தூய்மை பணியாளர்களுக்கு விரைவில் காலை உணவு திட்டம்

கே.சுரேஷ்

■ புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் 8 பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

அதிகாலையில் பணிக்கு செல்லும் தூய்மைப் பணியாளர்களின் உணவு தேவையை பூர்த்தி செய்யும் வகையில், சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த மாதம் தொடங்கி வைத்தார். அதன் பிறகு, இத்திட்டம் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்படும் என அப்போது அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழகம் முழுவதும் மாநகராட்சி, பேரூராட்சிகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு தயாரித்து வழங்குவதற்கான தனியார் நிறுவனத்தை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அதன் அடிப்படையில், புதுக்கோட்டை மாநகராட்சியில் இப்பணி நடைபெற்றது. மேலும், மாவட்டத்தில் ஆலங்குடி, பொன்னமராவதி, கறம்பக்குடி, கீரமங்கலம், அரிமளம், இலுப்பூர், அன்னவாசல், கீரனூர் ஆகிய 8 பேரூராட்சிகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு விரைவில் காலை உணவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பேரூராட்சி அலுவலர்கள் கூறியது:

தூய்மைப் பணியாளர்களுக்கு திங்கள், வெள்ளிக் கிழமையில் இட்லி, செவ்வாய்க் கிழமை ரவா கிச்சடி, புதன் கிழமை வெண் பொங்கல், வியாழக்கிழமை ரவா உப்புமா, சனிக்கிழமை ரவா பொங்கல், ஞாயிற்றுக்கிழமை சேமியா கிச்சடி காலை உணவாக வழங்கப்பட உள்ளது. மாவட்டத்தில் உள்ள 8 பேரூராட்சிகளிலும் இத்திட்டம் விரைவில் தொடங்கப்படும்.

ஒவ்வொரு பேரூராட்சியிலும் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் அடிப்படையில் ஓராண்டுக்கு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தலா ரூ.8 லட்சம் வீதம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

உணவை தரமாக தயாரித்து விநியோகம் செய்வதற்கு தனியார் நிறுவனத்தை ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்யும் பணி தொடங்கி உள்ளது. இப்பணி முடிவுற்றதும், உணவு வழங்கும் பணி நடைபெறும். உணவை ஒரே இடத்தில் வழங்காமல் குறைந்தது 4 இடங்களிலாவது பிரித்து வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

காலை 7.30-ல் இருந்து 8.30-க்குள் உணவு வழங்கப்பட உள்ளது. உணவு தயாரிக்கும் நிறுவனத்தை உறுதி செய்ததும் உணவு விநியோகிக்கும் பணி தொடங்கும் என்றனர்.

செல்போனில் பெண் குரலில் பேசி

ஆண்டிமடம் இளைஞரிடம் ரூ.17.5 லட்சம் மோசடி

கன்னியாகுமரி நபர் கைது

■ அரியலூர்

ஆண்டிமடத்தைச் சேர்ந்த வரிடம் பெண் குரலில் பேசி ரூ.17.50 லட்சம் மோசடி செய்த கன்னியாகுமரி இளைஞரை போலீஸார் கைது செய்தனர்.

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடத்தைச் சேர்ந்தவர் பார்த்திபன்(30). இவர், இணையவழியில் திருமண தகவல் மையத்தை பார்த்து வரன் தேடியபோது, அதிலுள்ள ஒருவரின் வாட்ஸ் அப் எண்ணில் தொடர்புகொண்டுள்ளார்.

அப்போது, அதில் பேசிய பெண், ஆன்லைன் வர்த்தகத்தில் முதலீடு செய்தால் அதிக லாபம் சம்பாதிக்கலாம் எனக் கூறி, பார்த்திபனை ரூ.17.50 லட்சத்தை முதலீடு செய்ய வைத்து ஏமாற்றியதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து அரியலூர் மாவட்ட இணைய குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் பார்த்திபன் புகார் அளித்தார். அதன்பேரில், ஆய்வாளர் இசைவாணி தலைமையிலான போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தினர்.

விசாரணையில், இந்த மோசடியில் ஈடுபட்ட நபர் கன்னியாகுமரி மாவட்டம் காட்டாதுறை கல்குளத்தைச் சேர்ந்த அசார்(36) என்பதும், அவர் பெண் குரலில் பேசி பார்த்திபனை ஏமாற்றியதும் தெரியவந்தது.

இதையடுத்து, கன்னியாகுமரிக்கு சென்று நேற்று முன்தினம் இரவு அசாரை கைது செய்த போலீஸார், 2 செல்போன்கள், 3 சிம்கார்டுகள், வங்கிப் புத்தகம், ஏடிஎம் கார்டு, பென்டிரைவ், ரூ.2,700 ரொக்கம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

திருமானூரில் நாளை நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ சேவை முகாம்

■ அரியலூர்

அரியலூர் மாவட்டம் திருமானூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நாளை (டிச.13) நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் நடைபெற உள்ளது.

முகாமில், சிறப்பு பிரிவு மருத்துவர்களான எலும்பு முறிவு, மனநலம், கண், குழந்தைகள் நலம் மற்றும் பொது மருத்துவம், சர்க்கரை நோய், காது, மூக்கு, தொண்டை, பல், மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், நரம்பியல், தோல் நோய், இருதயவியல் உள்ளிட்ட துறைகளின் சிறப்பு மருத்துவர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க உள்ளனர்.

மேலும், எக்கோ கார்டியோகிராம், அல்ட்ராசோனாகிராம், நடமாடும் எக்ஸ்ரே வாகனம் மற்றும் ரத்த பரிசோதனை சேவைகள், மாற்றுத் திறனாளிகள் சான்று மற்றும் முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகள் ஆகியவை வழங்கப்பட உள்ளன. எனவே, பொதுமக்கள் இம்மருத்துவ சேவை முகாமை பயன்படுத்திக் கொள்ளலாம் என ஆட்சியர் பொ.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

ஆலங்குடியில் நாளை வேலைவாய்ப்பு முகாம்

■ புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தனியார் வேலைவாய்ப்பு முகாம் நாளை(டிச.13) காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில், ஆதார், பயோடேட்டா, கல்விச்சான்றுகளின் நகல்களுடன் 8-ம் வகுப்பு முதல் பட்டதாரி வரை படித்துள்ளோர் பங்கேற்கலாம் என ஆட்சியர் எம்.அருணா தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில்

நாளை ரேஷன் குறைதீர் முகாம்

■ பெரம்பலூர்/ புதுக்கோட்டை

பெரம்பலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் நாளை (டிச.13) ரேஷன் குறைதீர் முகாம் நடைபெற உள்ளது.

இந்த முகாம்கள் ரேஷன் சார்ந்த குறைபாடுகளை களைவதற்கும், ரேஷன் கார்டுகளில் பெயர் சேர்த்தல், நீக்கல், பிழை திருத்தம் செய்தல் உட்பட பல்வேறு கோரிக்கைகளின் மீது உடனே தீர்வுகாண்பதற்காகவும் நடைபெறுகிறது.

பெரம்பலூர் வட்டம் க.எறையூரில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் தலைமையிலும், வேப்பந்தட்டை வட்டம் அன்னமங்கலத்தில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தலைமையிலும், குன்னம் வட்டம் பெரியம்மாபாளையத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தலைமையிலும், ஆலத்தூர் வட்டம் அயினாபுரத்தில் தனித்துணை ஆட்சியர் தலைமையிலும் நாளை காலை 10 மணிக்கு முகாம் நடைபெறும் என ஆட்சியர் மிருணாளினி தெரிவித்துள்ளார்.

இதேபோல, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 12 வட்டாட்சியர் அலுவலகங்களில் வட்ட வழங்கல் அலுவலர் முன்னிலையில் நாளை (டிச.13) காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை ரேஷன் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது என ஆட்சியர் எம்.அருணா தெரிவித்துள்ளார்.

வியர்க்கதே

கரூர்

கரூர் துணை மின் நிலையத்தில் இன்று(டிச.12) மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளன. இதன் காரணமாக, காமராஜபுரம், கே.வி.பி.நகர், செங்குந்தபுரம், பெரியார் நகர், திண்டுக்கல் சாலை, ஜவஹர் பஜார், திருமாநிலையூர், அக்ரஹாரம், காந்தி நகர், ரத்தினம் சாலை, கோவை சாலை, வடிவேல் நகர், ராமானுஜம் நகர், திருக்காம்புலியூர், ஆண்டாங்கோவில் சாலை, செல்லாண்டிபாளையம், சுக்காலியூர், சேலம் புறவழிச் சாலை, ஆண்டாங்கோவில், அண்ணா நகர், எம்ஜிஆர் நகர், பாண்டியன் நகர், பாரி நகர், சின்னாண்டாங்கோவில் சாலை, பதிபதி லே அவுட், வடக்கு லட்சுமிபுரம், தெற்கு லட்சுமிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் இருக்காது என செயற் பொறியாளர் ம.அர்ச்சுனன் தெரிவித்துள்ளார்.

தேமுதிக ஆலோசனைக் கூட்டம்

■ அரியலூர்

அரியலூரில் உள்ள தேமுதிக அலுவலகத்தில் அக்கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ராம.ஜெயவேல் தலைமை வகித்தார்.

கூட்டத்தில், மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த் நினைவு நாளையொட்டி டிச.28-ம் தேதி கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே நடைபெறும் மக்கள் உரிமை மீட்பு மாநாட்டில் திரளாக கலந்துகொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில் ஒன்றிய, பேரூர் மற்றும் கிளை நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல் மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

HDFC BANK
We understand your world

பதிவு அலுவலகம்: ஹெச்டிஎப்சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பபட் மார்க், லோயர் பேரல், மும்பை-400 013.

தங்க நகைகளுக்கான ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பொதுவாக பொதுமக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், பின்வரும் கணக்குகளில் கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்ட / தங்க நகைகளை விற்பதற்கு பொது ஏலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகைக் கடன் பாக்கிகளை செலுத்துமாறு HDFC பேங்க் லிமிடெட் (வங்கி) அறிவிப்புகளை அனுப்பிய போதும், நகைக் கடன் பெற்ற கடன்தாரர்கள் தாங்கள் முறையாக கையொப்பமிட்டு ஒப்புக்கொண்ட கடன் ஒப்பந்தத்தின் படி, கடனை முறையாக திருப்பிச் செலுத்தவில்லை. பின்வரும் கணக்குகளில் உள்ள பாக்கித் தொகை முழுவதையும் ஏழு நாட்களுக்குள் செலுத்துமாறும், தவறினால் மேல் அறிவிப்பின்றி, அடமானத்தில் உள்ள கடனுக்கு ஈடான தங்க நகைகள் முழுவதும் ஏலத்தில் விட வங்கிக்கு முழு சுதந்திரம் உண்டு எனக் கடன்தாரர்களுக்கு HDFC அறிவிப்பு ஒன்றையும் அளித்துள்ளது. ஆனாலும், கடன்தாரர்கள் அக்கறையின்றி பாக்கித் தொகைகளை செலுத்தாமல் இருந்து வருகின்றனர். எனவே, அடமான கடன் ஒப்பந்தத்தின் கீழ், கடனுக்கு ஈடாக வைக்கப்பட்ட தங்க நகைகள் மீது தமக்குரிய உரிமையை செயல்படுத்துவதற்கு, அடமானம் பெற்றவர் என்ற அளவில் ஒப்பந்தத்தின் படி தனது உரிமைகளை செயல்படுத்த வங்கி உத்தேசித்துள்ளது. அதன்படி, கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் முழுவதையும் ஏலத்தில் விற்று கடன்தாரர்களிடமிருந்து வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏலமானது கீழ்க்கண்ட கிளைகளில் 22.12.2025 தேதியில் மாலை 4.00 மணியளவில் நடத்தப்படும். எந்தவொரு காரணத்தால் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் ஏலம் நடைபெறாவிடில் அல்லது குறிப்பிட்ட தேதியில் முடியவில்லை என்றால் அந்த ஏலத்தை எந்தவொரு அடுத்த தேதி மற்றும் நேரத்தில் நடத்த வங்கிக்கு உரிமை உண்டு.

வ. எண்	நகை கடன் எண்	கடன்தாரர்கள் பெயர்	கடன் தொகை	ஏலம் நடைபெறும் இடம் (கிளையின் முகவரி)
1	75906177	ரித்திகா குமாரி	₹ 2,04,000/-	HDFC பேங்க் லிமிடெட் 5 G தரைத்தளம், பஸ் பிளாசா, லாசன் சாலை, கன்டோன்மெண்ட், திருச்சி 620001
2	75908313	ரித்திகா குமாரி	₹ 93,000/-	
3	73802014	விமல் எலா	₹ 2,00,691/-	

ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறான" மற்றும் "உள்ளது உள்ளவாறான" என்ற அடிப்படையில் நடைபெறும். மேற்குறிப்பிட்ட தங்க நகைகளில் தரம், தூய்மை, காரட்டேஜ், எடை அல்லது மதிப்பீடு ஆகியவை பற்றி ஏலத்தின்போது வங்கியானது பிரதிநிதித்துவம் மற்றும் உத்தரவாதம் தர இயலாது. ஏலம் நடைபெறுவதற்கு 45 நிமிடத்திற்கு முன்பாக வல்லுநர் அறிவுறுத்தலுடன் அல்லது அறிவுறுத்தல் இன்றி ஏலதாரர்கள் அவர்களாகவே அவர்கள் சொந்த செலவில் தங்க ஆபரணங்களின் தரம், தூய்மை, காரட்டேஜ், எடை அல்லது மதிப்பீடு குறித்து தங்களுடைய ஏலங்களை சமர்ப்பிப்பதற்கு முன், அவற்றைச் சரிபார்ப்பது, ஆய்வு செய்வது மற்றும் திருப்திப்படுத்துவது நகைகளை வாங்குபவர்என்ற முழு மற்றும் முழுமையான பொறுப்பாகும். இது தொடர்பாக வங்கியானது குறைந்தபட்ச கேட்புவிலையை நிர்ணயம் செய்து அதற்குட்பட்டு அனைத்து ஏலத் தொகைகளும் ஏற்கப்படும். ஏல நடவடிக்கைகள் மற்றும் விற்பனை (ஏதாவது இருந்தால்) ஆகியவை வங்கியின் தனிப்பட்ட முடிவின் படி சரி என்று கருதப்பட்ட மேற்கொண்டு விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் நடைபெறும். மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை ஏலத்திற்கு முன் தனது தனிநபர் கடன் கணக்கில் முழுமையாக செலுத்தினால், மேற்குறிப்பிட்ட கடன் கணக்கில் ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகை கடன் விலக்கி கொள்ளப்படும் மற்றும் ஏலம் எந்தவித முன் அறிவிப்புப் இன்றி ஏலமானது வங்கியால் விலக்கி கொள்ளப்படும். வங்கியின் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அவருக்கு ஏலத்தை தள்ளிவைக்கவோ அல்லது ரத்து செய்யவோ முன் அறிவிப்பு எதுவும் இன்றி ஏல நடவடிக்கைகளை நிறுத்தவோ காரணங்கள் எதுவும் தெரிவிக்காமலேயே ஏலத்தை மறுக்கவோ, தகுந்த காரணத்தை கூறாமலேயே ஏலத் தொகைகள் / ஆபர்களை மறுக்கவோ அதிகாரம் உள்ளது என்பதை அறியவும்.

தேதி: 12.12.2025 Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்
19-ஏ, ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை-600008.
CIN U74999TN1971SGC005967

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.எள்ஐடீ.47/க.பி/ஒ.எண்.47/2025-26 (இணையவழி மட்டும்) நாள்: 11.12.2025

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் சார்பாக ஒப்பந்தப்புள்ளிகள் "ஒரு உறை முறையில்" இணையவழி வாயிலாக மட்டும் பின்வரும் பணிக்கு வகுப்பு- IV மற்றும் அதற்குமேல் மாநில அளவில் உள்ள தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் இதரத்துறைகள் /மத்திய அரசுக்கு உட்பட்ட துறைகள் மற்றும் தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனங்களில் பதிவுபெற்ற ஒத்த பணிகளில் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள். 30.12.2025 மாலை 15.30 மணி (சேவையக கடிகார நேரத்தின் படி). பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள். 31.12.2025 மாலை 15.30 மணிக்கு (சேவையக கடிகார நேரத்தின் படி) திறக்கப்படும்.

பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு	முன் வைப்புத் தொகை
ஏ. சாத்தனூர் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 10.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி	ரூ.93.10 இலட்சம் (GST 18% உட்பட)	ரூ.57,000/-*

* முன் வைப்பு தொகையை இணையதளம் மூலமாகவோ (https://tntenders.gov.in) அல்லது eBG வாயிலாகவோ இணையதளத்தில் செலுத்தலாம் (இணைப்பு-II இல் சான்றளிக்கப்பட்ட வங்கிகளின் பட்டியலின்படி)

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட இணையதளம் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதள முகவரி https://tntenders.gov.in

செ.ம.தொ.இ./6614/ஒப்பந்தப்புள்ளி/2025 சிறப்புத் தலைமை பொறியாளர்

மதுரை மாநகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் மதுரை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படவுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

பணியின் பெயர்	ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பிக்கும் நாள்	ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் நாள்
EI/017517/15th CFC AAQ/2025-26 மதுரை மாநகராட்சி 15th CFC (AAQ) 2025-26 திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியில் பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தபுள்ளி வரவேற்கப்படுகிறது. (குறைந்தபட்சமாக ஒரு சிப்பத்தின் மதிப்பு ரூ.17.00/- இலட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.111.00/- இலட்சம் வரை ஆகும்.) (மொத்தம் -13 சிப்பம்)	From 15.12.2025 To 30.12.2025 3.00 pm	30.12.2025 4.00 pm

இதர விபரங்களை http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.
Contact No : 0452 - 2540333
ஆணையாளர்
செமொதொஇ /6599/ஒப்பந்தப்புள்ளி / 2025 மதுரை மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சி
மின்னணு முறையிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். TP3/3323/2025

1	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் & முகவரி	ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி	
2	வேலையின் விபரம், முன் வைப்புத் தொகை மற்றும் பணிகளின் எண்ணிக்கை	பணி விபரம்	எண்ணிக்கை
		EXPRESSION OF INTEREST (EOI)- For Demolition of Unauthorized Portion of Building at VJ Hospital, Tirunelveli Tirunelveli City Municipal Corporation (TCMC) invites sealed Expressions of Interest (EOI) from eligible and experienced demolition contractors for the safe demolition and debris disposal of the following structures located at: Location: VJ Hospital, 12-12/1, STC College Road, Perumalpuram, Tirunelveli-7 In compliance with: Hon'ble High Court Orders WP(MD) 8033/2020, WMP(MD) 22091/2025 & WMP(MD)27192/2025	1
3	ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த இணையதள முகவரி	மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அட்டவணையை கீழ்க்காணும் இணையதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். https://tntenders.gov.in	
4	ஒப்பந்தப்புள்ளிகள் நமூனா திறக்கம் செய்தல்	13.12.2025 காலை 10 மணி முதல் 22.12.2025 பிற்பகல் 3.00 மணி வரை	
5	ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல்	13.12.2025 காலை 10 மணி முதல் 22.12.2025 பிற்பகல் 3.00 மணி வரை	
6	ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள்	22.12.2025 பிற்பகல் 3.30 மணி	
7	முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெறும் இடம், நாள் மற்றும் நேரம்	மைய அலுவலகம் திட்டப்பிரிவு திருநெல்வேலி மாநகராட்சி, 17.12.2025 காலை 11.00 மணி	

செ.ம.தொ இ./6610/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி.

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகித நகர், மொண்டிப்பட்டி - 621 306. திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
252623 003652	திருச்சி TNPL அலகு - II ல் உள்ள Pulp Mill-ல் செய்முறை கட்டுப்பாட்டு அறை மற்றும் கள இயக்கங்களுக்கு உதவி செய்தல்	26.12.2025

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை NIC இணையதளத்தில் மட்டும் வெளியிடப்படும். மேலும் விபரங்களுக்கு www.tntenders.gov.in/nicgep/app இணையதளத்தில் பார்வையிடவும்.
செ.ம.தொ.இ/6589/ஒப்பந்தப்புள்ளி/2025 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

கனரா வங்கி Canara Bank
(அரசுடமையாக்கப்பட்ட வங்கி)
மண்டல அலுவலகம், திருச்சி.

வாகனங்கள் மின்னணு மூலம் ஏல விற்பனைக்கு

கடனாளர் / ஜாமீன்தாரர்களுக்கு கனரா வங்கியின் அதிகாரம் பெற்ற அதிகாரி மூலம் அறிவிப்பது என்னவெனில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமான வாகனங்களுக்கான நிலுவைத் தொகை, மேற்கால வட்டி மற்றும் இதர கட்டணங்களை வசூலிக்கும் பொருட்டு மின்னணு ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. வாகனங்கள் எங்க உள்ளதோ உள்ளது உள்ளபடி நிலையில் மற்றும் உத்திரவாதம் மற்றும் காப்பீடு இன்றி நடைபெறும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் BAANKNET என்ற இணைய தள முகவரி மூலம் மட்டுமே 13.01.2026 அன்று நடைபெறும்.

S.No.	Borrower Name & Branch	Registration No.	Make / Model	Reserve Price	EMD Amount	Increasing offer of Bidding	Liability as on 09.12.2025
1.	ARUNKUMAR, KARUMANDAPAM	TN81U 4351	TATA ALTROZ / 2021	4,00,000/- (RC Book Not Avail)	40,000/-	2,000/-	Rs.4,80,286/- + Further Interest thereon from 10.12.2025

NOTE: ALL EMD IS TO BE PAID IN CANARA BANK

A/c. No. : 209272434 / IFSC : CNRB0008442 / Bank & Branch : Canara Bank, Karumandapam Branch

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. விற்பனையானது BAANKNET என்ற இணையதள வாயிலாக மட்டுமே நடைபெறும்.
2. ஏலத் தேதி மற்றும் நேரம் : 13.01.2026 காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை.
3. ஏல முன்வைப்புத் தொகை &டெண்டர் படிவத்தினை சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் 12.01.2026 மாலை 4.00 மணிக்கு முன்னதாக.
4. வாகனங்களை முறையான முன் அனுமதி பெற்று 12.01.2026 அன்றோ அதற்கு முன்னதாகவோ பார்வையிடலாம்.
5. விருப்பமுள்ள ஏலதாரர்கள் டெண்டர் படிவத்துடன் புகைப்படம், PAN Card, அடையாள அட்டை ஆகியவற்றை 12.01.2026 அன்று மாலை 4.00 மணிக்கு முன்னதாக சமர்பிக்க வேண்டும். எனினும், வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலத் தொகையில் மீதமுள்ள தொகையினை செலுத்தும் பொழுது அசல் ஆவணங்களை சமர்பிக்க வேண்டும்.
6. ஏலத்தில் பங்கு பெறும் ஏலதாரர்கள் ஏல முன் வைப்புத் தொகையினை மேலே உள்ள அட்டவணையில் உள்ள கிளை மற்றும் கணக்கு எண்ணிற்கு RTGS/NEFT/Funds/DD/ Pay order மூலம் செலுத்த வேண்டும்.
7. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட தொகையிலிருந்து ஏலம் துவங்கும். மின் அணு ஏலத்தில் அதிக தொகையினை (நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேல்) குறிப்பிட்ட ஏலதாரரை வெற்றிபெற்ற ஏலதாரராக அறிவிக்கப்படும்.
8. ஏலம் முடிவுற்ற பின்னர் வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலத் தொகையில் 90% (முன்வைப்புத் தொகை நீங்கலாக) ஏழு நாட்களுக்குள் செலுத்த வேண்டும், தவறினால் செலுத்திய தொகை முழுவதும் (ஏல முன் வைப்புத் தொகை உட்பட) இழக்க நேரிடும்.
9. வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு எவ்வித வட்டியுமின்றி ஏல முன் வைப்புத் தொகை திருப்பித் தரப்படும்.
10. போக்குவரத்து துறைக்கான பதிவு கட்டணங்களை வாங்குபவரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.
11. காரணங்கள் ஏதும் குறிப்பிடாமல் எந்த ஒரு விலைக்குறியீட்டினையும் ஏற்கவோ / நிராகரிக்கவோ அல்லது ஏலத்தினை ஒத்தி வைக்கவோ / ரத்து செய்யவோ விதிகளில் மாற்றத்தினை ஏற்படுத்த வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.
12. வாகனங்களை பார்வையிடும் விருப்பமுள